**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2020**

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பேராதனிய - பதுளை - செங்கலடி வீதியின் பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான வீதியின் 147 கிலோமீற்றர்களை புனரமைப்பதன் மூலம் பிராந்தியத்தில் போக்குவரத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் ஏற்ற வகையில் ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 140 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி யூஎஸ்.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2019 மார்ச் அளவில் பூர்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) செயற்திட்டமானது மீளாய்வாண்டிற்கான 14 அனுமதிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களுடன் தொடர்புபட்ட ரூபா 1,445.5 மில்லியன் தொகையான செயற்திட்ட செலவினங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நடைமுறை வேலை மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தவேண்டியவைகள் போன்ற கணக்குகள் அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. மேலும் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் செலுத்தவேண்டிய பிடிகாசு போன்ற கணக்குகள் முறையே ரூபா 390.88 மில்லியன் மற்றும் ரூபா 34.33 மில்லியன் இனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். கூறப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் 2021 ஆம் ஆண்டில் கணக்கீட்டு பதிவுகளிற்கு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | நிதி வருடத்திற்கான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் நிதிக்கூற்றுக்களில் எண்ணிக்கையிடப்படல் வேண்டும். |
| (ஆ) ரூபா 272.22 மில்லியன் தொகையான ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல.08 இன் பிரகாரம் 2020 திசெம்பர் மாதத்திற்கான 05 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிற்காக செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்பெறுபேறாக, நடைமுறை வேலை, ஒப்பாந்ததாரர்களிற்கு செலுத்தவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டிய பிடிகாசு என்பன முறையே 272.2 மில்லியன், ரூபா 174.75 மில்லியன் மற்றும் 2.68 மில்லியனால் குறைவாக காட்டப்பட்டிருந்த அதே நேரம் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 94.78 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | கூறப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் நிதி வருடத்தின் பின்னரும் மற்றும் நிதிக்கூற்றுக்கள் இறுதியாக்கப்பட்டதன் பின்னரும் செயற்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தன. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் நிதிக்கூற்றக்களில் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டமானது 2020 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான கண்கானிப்பு ஆலோசனை செலவினங்களுடன் தொடர்புபட்டு அனுமதிக்கப்பட்ட 04 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நடைமுறை வேலை மற்றும் ஆலோசகர்களுக்கு செலுத்தவேண்டியவை ரூபா 24.92 மில்லியனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கூறப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் நிதி வருடத்தின் பின்னரும் மற்றும் நிதிக்கூற்றுக்கள் இறுதியாக்கப்பட்டதன் பின்னரும் செயற்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தன. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் நிதிக்கூற்றக்களில் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| இல | உருப்படி | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | ஒபிட்(OFID) பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழான, ஒவ்வொரு ஒப்பந்தமும் அண்ணளவாக 20 கிலோமீற்றர்கள் நீளத்தினை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதி 01, பொதி 02 மற்றும் பொதி 03 போன்றவற்றின் ஒப்பந்தத்துடன் தொடர்புபட்ட பௌதீக செயலாற்றல் முறையே 100 சதவீதம், 77 சதவீதம் மற்றும் 50 சதவீதத்தினை அறிக்கையிட்டிருந்தது. | உடன்பட்டனர். | வீதி வேலைகளின் மிகுதி புனரமைப்புகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | ஒபிட் பிரிவிலுள்ள 03 பொதிகளின் செயலாற்றல் கணிசமான அளவு குறைவாக இருந்தது அது உடன்படிக்கையின் பிரகாரம் உண்மையான பூர்த்தியாக்கல் காலம் 2 அரை வருடங்களிற்கு எதிராக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மான வேலைகளின் ஆரம்பிப்பிலிருந்து 03 வருடங்களும் 05 மாதங்களும் கடந்ததன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 100 சதவீதத்திற்கு எதிராக 50 சதவீதத்தினையே அறிக்கையிட்டிருந்தது. | 2021 ஜுலை 12 இலான தீர்மானத்தின் பிரகாரம் செயலாற்றல் மதிப்பாய்வு கூட்டத்தில், ஒப்பந்தாரர் தளத்தில் வேலையினை நிறுத்தியிருந்ததுடன் பின்னர் வேலை மற்றும் பெறுகையினை விரைவுபடுத்துவதற்கு இரண்டு பொதிகளிற்குள்ளும் வேலைகளை பிரிப்பதனூடாக மிகுதி வேலைக்கான கோரப்பட்ட ஏலம் நடைமுறையிலுள்ளது. | வீதி வேலைகளின் மிகுதி புனரமைப்புகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொறியியலாளர் ஒபிட் பிரிவின் பொதி 03 இற்கான ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றலை சரிசெய்ய 2020 திசெம்பர் 07 இல் ''சரிசெய்வதற்கான அறிவிப்பு'' வழங்கியிருந்தும் எவ்வித வெற்றிகரமான மாற்று நடவடிக்கைகளும் வேலைகளை விரைவுபடுத்தி பூர்த்திசெய்ய செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஜுலை 12 இலான தீர்மானத்தின் பிரகாரம் செயலாற்றல் மதிப்பாய்வு கூட்டத்தில், ஒப்பந்ததாரர் தளத்தில் வேலையினை நிறுத்தியிருந்ததுடன் பின்னர் வேலை மற்றும் பெறுகையினை விரைவுபடுத்துவதற்கு இரண்டு பொதிகளிற்குள்ளும் வேலைகளை பிரிப்பதனூடாக மிகுதி வேலைக்கான கோரப்பட்ட ஏலம் நடைமுறையிலுள்ளது. | வெற்றிகரமான மாற்று நடவடிக்கைகள் மிகுதி வேலைகளை துரிதப்படுத்தி பூர்த்திசெய்ய எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில வேலைகள்இ துணை அடித்தளங்கள்இ அடித்தளங்கள் மற்றும் சவுல்டர்ஸ்இ மேற்பரப்புஇ பாலங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் போன்றனவற்றிற்காக அளவைகள் பட்டியலில் செய்யப்பட்டிருந்த ஒதுக்கங்களில் அரைவாசி கூட ஒபிட் பிரிவின் பொதி 03 இன் ஒப்பந்ததாரரினால் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் செய்யப்பட்ட வேலைகளின் கிலோமீற்றர்களின் நீளம் கருத்தில்கொள்ளப்பட்டால் சவுல்டர் வேலைகள் 6.58 சதவீதம்இ ஏபிசி மற்றும் முதன்மை கோட் 32.11 சதவீதம் ஏரிக்கரை 40 சதவீதம் நிலக்கீழ் தாரிடல் 30.79 சதவீதம் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. | தற்போதுள்ள ஒப்பந்ததாரருடனான ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதற்கான செயன்முறை நடைமுறையிலுள்ளது. | வீதிகளினது வேலைகளின் மிகுதி புனரமைப்பினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த குறித்த நிபந்தனையின் உபபிரிவு 14.6 இன் பிரகாரம்இ ஓர் இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட வேலை ஒப்பந்த பெறுமதியில் 2 சதவீதத்தை விட அதிகமாக காணப்படல் வேண்டும். இருப்பினும்இ இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களின் மதிப்பீட்டின் போது தேவையான தொடக்க நிலைக்கு கீழான 44 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டது. | இக்கொடுப்பனவுகள் ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலினை மேம்படுத்தவும் செயற்திட்டத்தின் நன்மைக்காகவும் செய்யப்பட்டிருந்தது. | கிரயம்இ நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் தேவையற்ற நன்மைகள் போன்றவற்றினை குறைக்க ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட விடயங்களை பின்பற்றல் வேண்டும். |
| (ஈ) | சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்துடனான கடன் உடன்படிக்கையின் பிரகாரம் காணி சுவீகரிப்பிற்காக நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் கூட்டுமொத்தம் ரூபா 1.6 மில்லியன் காணி | காணி சுவீகரிப்பு வேலையின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக ஒரு ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர் அப்பிரிவுகளின் பிரதேச | எதிர்கால செயற்திட்டங்களில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கான சரியான |

| | | |
|---|---|---|
| சுவீகரிப்பு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காணி சுவீகரிப்பு புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் விசாரணை உத்தியோகத்தர் போன்றோறிற்கான ஆலோசகரிற்கு செய்யப்பட்ட இடைக்கால கொடுப்பனவுகளின் ஊடாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. அவ் 02 பதவிகளும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் ஆளனியில் உள்ளடக்கப்பட்டிராததுடன் மேற்கூறிய செலவினம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கான சரியான ஆளனி தேவைப்பாட்டினை அடையாளப்படுத்தாமல் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயலாளரின் ஒப்புதலுடனும் அமைச்சின் அனுமதியுடனும் நியமிக்கப்பட்டிருந்தார். | ஆளனி தேவைப்பாட்டினை அடையாளப்படுத்த வேண்டும். |